**உங்கள் வீட்டு உபயோக பொருள் ஏதேனும் பழுதடைந்துள்ளதா? இனி அதை தூக்கி எறியதேவையில்லை! எங்கள் ரிப்பேர் கஃபேக்கு எடுத்துவருங்கள் இனிய காபி அல்லது தேநீருடன் உங்கள் பொருட்களை பழுது பார்க்கலாம்.**

**ரிப்பேர் கஃபே என்றால் என்ன?**

ரிப்பேர் கஃபே என்ற நிகழ்ச்சி நமது வீட்டு உபயோக பொருட்களான கணினி, சிறிய உபகரணங்கள், மரச்சாமான்கள், ஆடைஆபரணங்கள், புத்தகம், மிதிவண்டி மற்றும் பல பொருட்களை நம் அக்கம்பக்கத்தாரே நமக்காக சரி செய்யும் ஒரு முயற்சி. உங்கள் வீட்டில் உள்ள பழுதடைந்த பொருட்களை ரிப்பேர் கஃபேக்கு எடுத்து வாருங்கள் நாங்கள் அதை சரிபார்க்க முயற்சி செய்வோம்! இது எல்லோருக்கும் இலவசமாக கிடைக்கும் சேவை!

**ரிப்பேர் கஃபே டொராண்டோ என்றால் என்ன?**

நாங்கள் டொராண்டோவை சார்ந்த சுயலாபமற்ற தன்னார்வ குழு. டொராண்டோவில்

பல்வேறு இடங்களுக்கு சென்று **ஃபிக்ஸ்-இட்(**சரிசெய்) நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்.
**எங்கள் குழுவில் சேர ஆர்வம் உள்ளவர்களை** நாங்கள் தேடுகிறோம்!

நீங்கள் வேடிக்கை மற்றும் சவாலாக வீட்டு உபயோகப்பொருட்களை சரிசெய்யும் ஆர்வம் உள்ளவரா? உங்கள் திறமைகளையும் அறிவையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா? தன்னார்வ ஆர்வம் உள்ளவரா? பொழுதுபோக்கு மற்றும் நிபுணர்களை நாங்கள் வரவேற்கின்றோம்! எங்கள் அணியை சேர இந்த முகவரிக்கு செல்லவும்: repaircafetoronto.ca/volunteer

**எங்களின் அடுத்த நிகழ்ச்சி?**

எங்கள் வலைத்தளத்தில் காலெண்டர் மற்றும் வரைபடத்தை பார்க்கவும்: repaircafetoronto.ca/upcoming-events

**மேலும் தகவலுக்கு:**

எங்கள் வலைத்தளத்தை பார்க்கவும் repaircafetoronto.ca அல்லது எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி info@repaircafetoronto.ca.

மொழிபெயர்ப்பு அல்லது விளக்கம் ஆதரவு தேவை எனில், தயவுசெய்து ஒரு நண்பரை அழைத்து வாருங்கள்.

*Toss it? No way! Bring it to the Repair Café!*